<u>சுருக்கம்</u>

பேரூராட்சிகள் நிர்வாகம் – 2009–2010ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டம் – 28 பேரூராட்சிகளில் ரூ.560.00 இலட்சத்தில் புதிய அலுவலகக் கட்டிடங்கள் கட்ட நிர்வாக ஒப்பளிப்பு செய்து ரூ.225.00 இலட்சம் விடுவித்தது போக 2010–2011ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மீதத் தொகை ரூ.335.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.


---

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை</u>

**அரசாணை (2 ப) எண். 34** **நாள்: 28. 5. 2010**

**14, வைகாசி, திருவள்ளுவர் ஆண்டு 2041**

படிக்க:

1. ந.நி.(ம)கு.வ.துறையின் அரசாணை (2ப) எண். 115 நாள் 19.11.2009.
2. 2010–2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு.
3. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண். 20391/2008/ஆ1, நாள் 26.3.2010.

------

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2009–2010ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ், 28 பேரூராட்சிகளில் ரூ. 560.00 இலட்சம் செலவில் புதிய அலுவலக கட்டிடங்கள் கட்ட நிர்வாக ஒப்பளிப்பு செய்து அதில் 40% தொகையாக ரூ. 225.00 இலட்சம் மட்டும் விடுவித்து, மீதம் 60% தொகையான ரூ.335.00 இலட்சத்தினை 2010–2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2010–2011ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.335.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்சொன்ன கட்டுமான பணிகளை மேற்கொள்ள இத்தொகையினை விடுவித்து ஆணை பிறப்பிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து, 2009–2010ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்டு கட்டப்பட்டு வரும் 28 பேரூராட்சிகளுக்கான புதிய கட்டிடங்கள் கட்டி முடிக்க மொத்த மதிப்பீடான ரூ.560.00 இலட்சத்தில் முன்னர் விடுவிக்கப்பட்ட 40% தொகை ரூ.225.00 இலட்சம் போக மீதம் 60% தொகையான ரூ.335.00 (ரூபாய் மூன்று கோடியே முப்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத் தொகையை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"**2217-** நகர்ப்பகுதி வளர்ச்சி – **80** – பொது – **193** – நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்–**II** மாநிலத் திட்டம் – **JB** இருபத்தெட்டு பேரூராட்சிகளுக்கு புதிய அலுவலகக்கட்டிடங்கள் கட்டுதல்–**09** – உதவித்தொகை – **02** மூலதனச் செலவிற்கான உதவித்தொகை **(கு.தொகு. 2217–80–193–JB 0921)**

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று, சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்க பேரூராட்சிகளின் இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 27055/MAWS/10, நாள் 28.5.2010–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
இயக்குநர்,
உள்ளாட்சிகளின் கணக்கு தணிக்கைத்துறை,
சென்னை–108.
உதவி இயக்குநர்,
பேரூராட்சிகள் சம்பந்தப்பட்ட மாவட்டங்கள்.
மாநில கணக்குத் துறை தலைவர்,
சென்னை – 18/35.

<u>நகல்:</u>

முதன்மைச் செயலரின் தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்
(அந2 / வரவு செலவு) துறை, சென்னை–9.
நிதி (ந.நி(ம)கு.வ/வ.செ./பொது.II) துறை,
சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.